ஆம்பூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு. ஆ. முத்துசாமி.பி.காம்.,

ந.க.எண் : 2345/2025/எப்1 **நாள் : 09.03.2025**

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – ஆம்பூர் நகராட்சி – வார்டு : F, பிளாக் : 1, நகரளவு எண்கள் : 2/1A & 2/1B–ல் 4.10 ஏக்கர் (16617.00 ச.மீ) பரப்பில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – குடியிருப்பு மனைப்பிரிவுக்கு நகராட்சி இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பத்தூர் அவர்களின் கடிதம் ROC:TPH/2B130G1V/57966/2025/TCP நாள்.12.12.2025.
2. தான பத்திரம் ஆவண எண். 9307/2025 நாள்.11.12.2025.
3. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பத்தூர் அவர்களின் கடிதம் ROC:TPH/2B130G1V/57966/2025/TCP (ம) மணைபிரிவு வரைப்படம் SWP/DTCP/TIRUPATHUR/LAYOUT NO : 89/2025 நாள்.12.12.2025.
4. மனுதாரர் திரு.M.பூபாலன் த/பெ. R,மோகன்பாபு, 3/132, ஒத்தைவாடை தெரு, உமராபாத் என்பவரின் விண்ணப்ப நாள்.13.02.2026.
5. பிரியதர்ஷினி பொறியியல் கல்லூரி, வாணியம்பாடி அவர்களின் அறிக்கை நாள் : 26.02.2026
6. நகர மன்ற தீர்மானம் எண். 78 நாள்.13.01.2026.

.....

ஆணை :–

பார்வை – 1 ல் காணும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பத்தூர், அவர்களின் கடிதத்தில் வார்டு : F, பிளாக் : 1, நகரளவு எண்கள் : 2/1A & 2/1B–ல் 4.10 ஏக்கர் (16617.00 ச.மீ) பரப்பளவில் அமையும் உத்தேச மனைப்பிரிவிற்கு பொது ஒதுக்கீடு மற்றும் சாலை அமைப்பு வரைப்பட அனுமதி (Road Pattern Plan Approval) வழங்கப்பட்டுள்ளது.

பார்வை – 2 ல் காணும் தான பத்திரத்தின் வாயிலாக பொது ஒதுக்கீடு மற்றும் சாலை அமைப்பு வரைப்பட அனுமதியின்படி (Road Pattern Plan Approval) மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

பார்வை – 3 ல் காணும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பத்தூர் அவர்களின் கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு

SWP/DTCP/TIRUPATHUR/LAYOUT NO : 89/2025 நாள் : 12.12.2025 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை – 4 ல் காணும் மனுதாரர் திரு.M.பூபாலன் த/பெ. R.மோகன்பாபு, 3/132, ஒத்தைவாடை தெரு, உமராபாத் என்பவர் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குமாறு கோரியுள்ளார்.

மேற்படி மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட்டு மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் மனுதாரால் அடிப்படை வசதிகளான சாலை வசதி, கால்வாய் வசதி, சிறுபாலம் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் ஆகிய பணிகள் செய்யப்பட்டும், பூங்கா மற்றும் பொது உபயோக இடங்கள் வேலி அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. மேலும் மின் கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் ரூ.3,28,820/– இரசீது எண்: PGC/NB832641155 நாள்: 10.02.2026 –ல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க நகராட்சிக்கு செலுத்திய கட்டணவிவரங்கள்

(அ)	மனைப்பிரிவிற்கான கூராய்வு கட்டணம் ஏக்கருக்கு ரூ 1000/– வீதம்	4.10 x 1000	4100/-	செ.எண் : 023/CP/ 25–26/0006605 நாள் : 06.03.2026
(ஆ)	மனை உட்பிரிவு கட்டணம் ஒரு மனைக்கு ரூ1000/– வீதம்	116 x 1000	116000/-	
(இ)	மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ஏக்கருக்கு ரூ 10000/– வீதம்	4.10 x 10000	41000/-	
(ஈ)	அபிவிருத்தி கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ 2.50/– வீதம்	16617 x 2.50	42000/-	
(உ)	உட்கட்டமைப்பு வசதிக்கான 5 ஆண்டுக்கான பராமரிப்பு வைப்புத்தொகை ஏக்கருக்கு ஏக்கருக்கு ரூ 100000/– வீதம்	4.10 x 100000	410000/-	

ஆகிய கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை – 5 ல் காணும் பிரியதர்ஷினி பொறியியல் கல்லூரி, வாணியம்பாடி அவர்களிடம் இருந்து மூன்றாம் நபர் தரப்பரிசோதனை அறிக்கை (Third Party Inspection Report) வழங்கப்பட்டுள்ளது.

பார்வை – 6 ல் காணும் நகரமன்ற தீர்மானத்தில் மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் தானமாக வழங்கியுள்ளதை எற்கவும் மனைப்பிரிவிற்கான உரிய கட்டணங்கள் செலுத்திய பிறகு இறுதி ஒப்புதல் வழங்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பார்வை 3 ல் காணும் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதத்தில் உள்ள நிபந்தனைகளின் படியும், ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படம் SWP/DTCP/TIRUPATHUR/LAYOUT NO: 89/2025-ன் படியும் செயல்பட வேண்டும் என தெரிவித்து இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி

09/03/2026

இணைப்பு :– நிபந்தனைகளுடன் கூடிய மனைப்பிரிவு வரைப்படம்–1

பெறுநர் :–

திரு.M.பூபாலன்
த/பெ. R,மோகன்பாபு,
3/132, ஒத்தைவாடை தெரு,
உமராபாத், ஆம்பூர்,
வேலூர் மாவட்டம்.

நகல் :–

1. உதவி இயக்குநர் , மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பத்தூர்.
2. சார் பதிவாளர், ஆம்பூர்.
3. வட்டாட்சியர், ஆம்பூர் மற்றும் நகர்சார் ஆய்வாளர், ஆம்பூர் (இம்மனைப்பிரிவில் அமையும் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் ஆகியவற்றை உட்பிரிவு செய்து நகராட்சி ஆணையர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மற்றும் மனை உட்பிரிவு பணிகளை கண்காணித்து உட்பிரிவு மேற்கொள்ள வேண்டி).
4. நகராட்சி பொறியாளர், ஆம்பூர் (இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை சாலை பதிவேட்டில் பதிந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள).